வாழ்க பாரதம்  வெல்க செம்மொழி தமிழ்

# மனித உறவுகள் மேம்பட

குடும்பத்திலும் சரி அலுவலகத்திலும் சரி மனித உறவுகள் விரிசல்கள் ஏற்படாமல் இருக்கவும், ஏற்பட்ட விரிசல்கள் மேலும் பெரிதாகாமல் இருக்கவும்

1) நானே பெரியவன் நானே சிறந்தவன் என்ற அகந்தையை (Ego) விடுங்கள்.

2) அர்த்தமில்லாமலும் பின் விளைவை அறியாமலும் பேசிக்கொண்டேயிருப்பதை விடுங்கள் (Loose Talks)

3) எந்த விஷயத்தையும் பிரச்சனையையும் நாசுக்காக கையாளுங்கள், (Diplomacy) விட்டுக் கொடுங்கள் (Compromise). விட்டுக் கொடுப்பவன் கெட்டுப் போவதில்லை கெட்டுப்போகிறவன் விட்டுக் கொடுப்பதில்லை.

4) சில நேரங்களில் சில சங்கடங்களைச் சகித்துதான் ஆக வேண்டும் என்று உணருங்கள் (Tolerance)

5) நீங்கள் சொன்னதே சரி செய்ததே சரி என்று வாதாடாதீர்கள் (Adament Argument)

6) உண்மை எது? பொய் எது? என்று விசாரிக்காமல் இங்கே கேட்டதை அங்கே சொல்வதையும், அங்கே கேட்டதை இங்கே சொல்வதையும் விடுங்கள் (Carrying Tales)

7) மற்றவர்களைவிட உங்களையே எப்போதும் உயர்த்தி நினைத்து கர்வப்படாதீர்கள் (Superiority Complex)

8) அளவுக்கதிகமாய் தேவைக்கதிகமாய் ஆசைப்படாதீர்கள் (Over Expectation)

9) எல்லோரிடத்திலும் எல்லா விஷயங்களையும், அவர்களுக்கு சம்பந்தம் உண்டோ இல்லையோ சொல்லிக் கொண்டிருக்காதீர்கள்.

10) கேள்விப்படுகிற எல்லா விஷயங்களையும் நம்பி விடாதீர்கள்.

11) அற்ப விஷயங்களைப் பெரிதுபடுத்தாதீர்கள்.

12)உங்கள் கருத்துக்களில் உடும்புப் பிடியாய் இல்லாமல் கொஞ்சம் தளர்த்திக் கொள்ளுங்கள் (Flexibility)

13)மற்றவர் கருத்துக்களை, செயல்களை நடக்கின்ற நிகழ்ச்சிகளைத் தவறாக புரிந்து கொள்ளாதீர்கள் (Misunderstanding)

14)மற்றவர்களுக்குரிய மரியாதை கொடுக்கவும், இனிய இதமான சொற்களைப் பயன்படுத்தவும் தவறாதீர்கள் (Courtesy)

15)பேச்சிலும், நடத்தையிலும் பண்பில்லாத வார்த்தைகளையும், தேவையில்லாத மிடுக்கையும் காட்டுவதைத் தவிர்த்து அடக்கத்தையும் பண்பையும் காட்டுங்கள்.

16)பேசத்தகுதியானவர்களிடத்தில் அவ்வப்போது நேரில் சந்தித்து மனம் திறந்து பேசுங்கள்.

17)பிரச்சனைகள் ஏற்படும் போது அடுத்தவர் முதலில் இறங்கிவர வேண்டும் என்று காத்திருக்காமல் நீங்களே பேச்சைத் துவக்க முன்வாருங்கள்.

18)புன்முறுவல் காட்டவும் அன்புச் சொற்களைச் சொல்லவும்கூட நேரமில்லாதது போல் நடந்து கொள்ளாதீர்கள்.

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய் கவர்ந்தற்று" - குறள்-100

"யாகாவாராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" - குறள்-127



செ.விஜயராஜன்
ஆலங்குளம்